2013 மே 7]

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 418, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

418—

தூர் வாருதல்

__5837__—**திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் உள்ள குடகனாறு அணையைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேடசந்தூர் தொகுதியில் உள்ள குடகனாறு அணை தூர் வாரப்படுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பி உள்ளார்கள். குடகனாறு அணையின் மதகுகளின் அடிமட்டம் ஆற்றின் படுகை மட்டத்திலேயே அமைக்கப்பட்டுள்ளதால், ஆற்றில் மதகுகளின் வழியே தண்ணீர் திறந்துவிடப்படும்பொழுது தேங்கிக் கிடக்கும் வண்டல் மண் தானாகவே வெளியேறிவிடுகிறது. கடந்த 2009 ஆம் ஆண்டு பழைய மதகுகளை மாற்றி புதிய மதகுகள் அமைக்கப்பட்டபொழுது, அணையிலிருந்த தண்ணீர் முழுவதும் வெளியேற்றப்பட்டது. அப்பொழுது படிந்திருந்த மண் முழுவதும் வெளியேறியுள்ளது. எனவே, குடகனாறு அணையினைத் தூர் வாரும் கருத்துரு எதுவும் எழவில்லை. 'தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்றார் பாரதி. அதற்கு அவசியமில்லை. மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைவருக்கும் உணவு வழங்கும் அட்சய பாத்திரமாக அம்மா உணவகங்களைத் திறந்து வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கோடிக்கணக்கான அடித்தட்டு மக்களின் ஏந்தலாக விளங்கிக்கொண்டிருக்கின்ற காவேரித் தாய், அம்மா அவர்கள்

ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே மழைக்காலங்களில் வருகின்ற நீரை சேமிக்கவேண்டும், அதற்கு என்னென்ன வழிகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் மேற்கொள்ளவேண்டும் என்றும், அணைகள் எல்லாம் ஆய்வு செய்யப்படவேண்டும், எந்தெந்த அணைகளிலே வண்டல் மண் அதிகமாக இருக்கிறதோ, அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, உடனடியாக தூர் வாருவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.

திரு. ச. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதி காத்து, சம நீதி வழங்கி வரும் தமிழக முதலமைச்சர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பகுத்தறிவிலே தந்தை பெரியாராகவும், அறிவாற்றலில் பேரறிஞர் அண்ணாவாகவும், ஈகைக் குணத்திலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகவும் (மேசையைத் தட்டும் ஒலி), கருணையிலே அன்னை தெரசாவாகவும், வீரத்திலே வேலு நாச்சியாராகவும், மரங்கள் நடுவதிலே மாமன்னர் அசோகராகவும், சிந்தனையிலே விவேகானந்தராகவும், (மேசையைத் தட்டும் ஒலி) கருத்துகளை எடுத்துரைப்பதிலே வாழும் வள்ளுவராகவும், கடமையாற்றுவதில் கண்ணியமிக்க காயிதே மில்லத்தாகவும் இருந்து செயலாற்றிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிலத்தடி நீர் உயர மழைநீர் சேகரிப்பு என்னும் மகத்தான திட்டம் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேடசந்தூர் தொகுதியிலே உள்ள குடகனாறு அணை கட்டப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை தூர் வாரப்படாமல் உள்ளது. இந்த அணையின்மூலம் கரூர் மாவட்டத்தில் 5,637 ஏக்கரும், வேடசந்தூர் தொகுதியில் 3,327 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. ஆகவே, இந்த அணை இதுவரை தூர் வாரப்படாததால் இதனுடைய நீர் கொள்ளளவு குறைந்துள்ளது. மிகவும் வறட்சிப் பகுதியான வேடசந்தூர் தொகுதியில் நிலத்தடி நீர் ஆதாரமாக விளங்குவது

2013 மே 7]

குடகனாறு அணைதான். ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த அணையைத் தூர் வாரி, கொள்ளளவை அதிகப்படுத்தி, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதோடு அந்தப் பகுதி மக்களுக்கு பாசன வசதியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கேட்டதும் கொடுப்பவனே கிருஷ்ணா' என்பார்கள். ஆனால், கேட்காமலே கொடுக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) கவனத்திற்கு உறுப்பினருடைய கோரிக்கையை எடுத்துச் சென்று, உடனடியாக அணையைத் தூர் வாருவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. ச. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைத்ததை நினைத்தவுடன் நிறைவேற்றித் தரும் மாண்புமிகு அம்மா அவர்கள் கவனத்திற்கு எடுத்துச்செல்ல உடனடியாக உத்தரவிட்டதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்தம் பொற்பாதங்களில் என்னுடைய தொகுதி மக்களின் கோடானுகோடி நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 419, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

419—

கால்நடை மருத்துவமனை

*__7493__—**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—